# கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

# திருவாரூர்.

## CC.No.14/2022

2022-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 1 - ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆனந்தி | வயது | |
| கணவர் பெயர் | ஹரிகரசுதன் | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது திருவாரூர் மாவட்டம் வடபாதிமங்கலத்தில் உள்ள எனது அப்பா வீட்டில் வசித்து வருகிறேன். எனது கணவர் பெயர் Hariharasudhan அவர் 1 வது எதிரி ஆவார். ஆஜர் 2 வது எதிரி ஜெயமணி என்பவர் எனது கணவரின் தகப்பனார். ஆஜர் 3 வது எதிரி வைஜெயந்திமாலா எனது கணவரின் தாயார் ஆவார். ஆஜர் 5 வது எதிரி ஜெயபாரதி எனது கணவரின் தங்கை ஆவார். ஆஜரில் இல்லாத 4 வது எதிரி ஜெயஸ்ரீ எனது கணவரின் அக்கா ஆவார். நானும் எனது கணவரும் சென்னையில் உள்ள வெவ்வேறு தனியார் கம்பெனியில்வேலை பார்த்து வந்தோம். பின்னர் எனது கணவர் அவரே வந்து என்னை பிடித்து இருப்பதாகவும், என்னை காதலிப்பதாகவும் கூறினார். அதற்கு அவரிடம் எனக்கு அம்மா இல்லை அப்பா மட்டும் தான் உள்ளார். எதுவாக இருந்தாலும் அப்பாவிடம் பேசுமாறு கூறினேன். முதலில் உங்கள் வீட்டில் விஷயத்தை கூறி சம்மதம் பெறும்மாறும் கூறினேன். நான் பலமுறை அவருடைய அம்மாவிடமும், அப்பாவிடமும் பேசகிறேன் என்று கூறினேன். ஆனால் அவர் நான் பேசிக் கொள்கிறேன் என்றும், ஒரு முறை அவர் தொலைபேசியில் என்னுடைன் பேசி கொண்டிருக்கும்போதே Conference call லில் அவருடைய அம்மாவிம் பேச செய்தார். அப்போது அவரிடம் நான் சாதாரணமாகதான் பேசினேன். சென்னையிலேயே அவர் தங்கியுள்ள இடத்தை பார்ப்பதற்காக என்னை அழைத்தார். நானும் அவர் வீட்டில் அவருடைய அம்மாவிடமும், அப்பாவிடமும் பேசிவிட்டோமே என்று சென்றேன். அங்கு அவரோடு உறவில் இருக்குமாறு அழைத்தார். அதற்கு நான் கற்பமாகி விட்டால் என்ன செய்வது என்று கேட்டேன் அதற்கு நான் கற்பமாகி விட்டால் நான் திருமணம் செய்து கொள்கிறேன் என்று கூறினார். அன்றைய தினம் அவருடைய அம்மாவிடம் நான் பேசினேன். அவர்கள் நல்லபடியாகதான் பேசுகிறார்களே சம்மதம் தெறிவித்துவிட்டார்கள் என்று நானும் அன்றையதினம் உறவில் இருந்தேன். பின்னர் என்னை நான் தங்கி இருக்கும் அறையில் கொண்டு வந்து விட்டார்.

அதன் பிறகு பலமுறை வந்து உறவுக்கு அழைப்பார். அறையில் என்னோடு தங்கி இருக்கும் தோழிகளுக்கு அவர் வருவது பிடிக்கவில்லை என்பதால் அடிக்கடி சண்டை வரும். என் கணவரின் 2 வது அக்காவின் கணவர் இளையராஜா என்பவர் எனது ஊரைச்சேர்ந்தவர். அவர் என்னிடம் வந்து எனது மச்சான் ஹரிகரசுதன் என்பவர் திருமணம் சம்பந்தமாக நான் தான் உங்கள் வீட்டில் வந்து பேச வேண்டும் என்று கூறினார். பின்னர் எனது கணவர் அப்போது திருமணம் சம்பந்தமாக பேச வரவில்லை என்பதற்காக அறலி விதையை அறைத்து குடித்தேன். அந்த விசயம் எனது அப்பாவிற்கு தெரியவந்து கேட்டபோது ஹரிகரசுதன் என்பவரை காதலித்த விசயத்தை பற்றி அவரிடம் கூறினேன். அதற்கு எனது அப்பா அவரை வந்து என்னிடம் பேச சொல் என்று கூறினார். அதற்கு எனது கணவரும் அவருடைய நண்பரை அழைத்துக் கொண்டு வந்தார். புனவாசலில் உள்ள எனது சித்தியின் வீட்டிற்கு அழைத்து வந்து எனது அப்பா ஏன் உங்கள் வீட்டாரை அழைத்து வரவில்லை என்று கேட்டதற்கு தை மாதம் அழைத்து வருவதாகவும், அதற்கு முன்பு திருமண வயதில் அக்கா இருப்பதால் அவருக்கு திருமணம் முடித்து விட்டு பிறகு அழைத்து வருவதாக கூறினார். என்னுடைய மகளுக்கு பிடித்திருந்தால் திருமணம் செய்து வைக்கிறேன். இல்லை என்றால் நான் எதுவும் செய்யஇயலாது என்று கூறினார். அதற்கு என் கணவர் அப்போது, நான் இல்லை என்றால் உங்கள் மகள் வேறு யாரையும் திருமணம் செய்து கொள்ளமாட்டார் என்று கடுமையாக பேசியதால் அவருக்கும், எனது அப்பாவிற்கும் வாக்குவாதம் முற்றி பெண் இல்லை என்று கடுமையாக பேசிவிட்டார். அதன் பிறகும் நானும் அவரும் பேசிக் கொண்டு தான் இருந்தோம். ஒரு நாள் எனக்கு மயக்கமாகவும், உடல்நிலை சரியில்லாததாலும் மருத்துவமனைக்குஅழைத்து செல்லுமாறு கூறினேன். அதற்கு அவர் மறுத்து வீட்டிலேயே கற்ப பரிசோதனை செய்யும் அட்டையை வாங்கி வருவதாகவும் பின்னர் மருத்து வமனைக்கு செல்லலாம் என்றும் கூறினார். அந்த அட்டையை வைத்து நான் பரிசோதனை செய்ததில் நான் கர்பமாகி இருந்தது உறுதி செய்யப்பட்டது. அதனை அடுத்து எனது கணவர் அவரது அக்காவின் திருமணம் முடியும் வரை எனது அப்பா வீட்டிலேயே இருந்து விடுகிறேன் என்னை திருமணம் மட்டும் செய்து கொண்டு விட்டு செல்லுமாறு கூறினேன். ஆனால் எனது கணவர் என்னோடு தொலைபேசியில் கூட தொடர்பு கொள்ளவில்லை. நான் பலமுறை முயற்சி செய்தும் தொடர்பு கொள்ள இயலவில்லை. கமலாபுரத்தில் உள்ள அவரது வீடு எது என்று எனக்கு சரியாக தெரியாததால் ஒரு ஆட்டோ காரரிடம் விசாரித்து பின்னர் எனது கணவரின் அப்பா என்று தெரியாமால் அவரிடமே ஜெயமணி வீடு எது என்று தெரியாமல் விசாரித்து சென்றேன். அங்கு அவரது அம்மா வீட்டில் தூங்கி கொண்டிருந்தார். பின்னர் அந்த சமயம் அவரது அப்பாவும் வீட்டிற்கு வந்த பின்னர் இருவரும் மாறி மாறி திட்டினார்கள். எனது மகன் அப்படிதான் இருப்பான் என்று கூறினார்கள். எங்களுக்கும், உனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை எதுவாக இருந்தாலும், குலமாணிக்கத்தில் எனது மகள் வீட்டில் உள்ள எனது மகனிடம் பேசிக் கொள் என்று நான் வந்த ஆட்டோவிலேயே

ஏறி செல்லுமாறு கூறினார்கள். அதற்கு எனது கணவர் அங்கு எனது மானத்தை வாங்க வேண்டாம் குலமாணிக்கத்திற்கு வருமாறு கூறினார். அந்த ஆட்டோவில் அவரது அப்பா, அம்மாவுடன் கிளம்பி சென்றேன். அவர்கள் என்னை வடபாதிமங்கலத்தில் உள்ள காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று என்மீது புகார் கொடுத்தனர். அப்போது மணி இரவு 11.00 என்பதால் காவல் நிலையத்தில் போலிசார் இதற்கு மேல் வைத்து விசாரணை செய்ய முடியாது என்பதால் ஊர்காரர்ககளை அழைத்து வருமாறும், அவர்களோடு தற்போது பேசி அனுப்பி வைத்து விட்டு மறுநாள் விசாரணை செய்வதாகவும் கூறினார்கள். அதன் பேரில் ஊரில் உள்ள ஒரு முக்கியஸ்தர் ஒருவர் பொறுப்பெடுத்துக் கொண்டு இன்று ஒரு நாள் மட்டும் அடைக்கலம் கொடுப்பதாகவும் கூறினார். பின்னர் எனது அப்பாவிற்கு விசயம் தெரிந்து காவல் நிலையத்திற்கு வந்து என்னை மீறி சென்றதால் எனக்கும் எனது மகளுக்கும் இனி எந்த சம்பந்தமும் இல்லை என்று காவல் நிலையத்தில் எழுதி கொடுத்து சென்றுவிட்டார். பின்னர் எனது கணவரின் ஊரை சேர்ந்த முக்கியஸ்தர்களும், உறவுக்காரர்களும் காவல் நிலையத்தில் சமரசம் பேசுவதற்காக வந்தனர். அப்போது அவர்கள் முன்னிலையில் பழகி வந்ததை ஒத்துக் கொண்டும், ஆனால் நான் கருவுற்றது அவருடைய குழந்தை இல்லை என்றும், கூறினார். அதற்கு நான் மரபனு சோதனை செய்வதற்கும் நான் தயாராக உள்ளேன் என்றும் கூறினேன். அதற்கு போலிசார் எனது கணவரிடம் நான் புகாரை பெற்று கொண்டு வழக்கு பதிவு செய்து கொள்கிறேன் என்று கூறவே அவருடைய அக்கா ஜெயபாரதி 5 வது எதிரி எனது தம்பி திருமணம் செய்து கொள்வார் வழக்கு எதுவும் வேண்டாம் என்று கூறினார். அதன் பிறகு இன்னும் 2 தினங்களில் பதிவு திருமணம் செய்து கொள்வதாக கூறி எழுதி கொடுத்து அதில் எனது கணவரும்,கணவரின் குடும்பத்தாறும் கையொப்பம் இட்டு சென்றார்கள். பின்னர் 2 தினம் கழித்து அவர் கூறியதுபோல் 10.11.2021 ம் தேதியன்று மதியம் 3.00 மணியளவில் பதிவு திருமணம் செய்து கொள்வதற்காக கூத்தாநல்லூர் பதிவு அலுவலகம் சென்ற போது அவர்கள் தாலி கட்டிக் கொண்டு வருமாறு கூறியதன் அடிப்படையில் 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கோழையார் காளியம்மன் கோவில் மாலை 4.30 மணியளவில் எனது கணவரின் அப்பா மற்றும் 3 வது அக்கா, 2 வது அக்காவின் கணவர் மற்றும் அவருடைய அண்ணன் ஆகியோர்கள் முன்லையில் திருமணம் நடந்தது. பின்னர் பதிவு அலுவலகத்திற்கு வந்தபோது நேரம் ஆகிவிட்டதால் அன்றைக்கு திருமணத்தை பதிவு செய்ய இயலவில்லை. ஆகையால் நேரடியாக வடபாதிமங்கலத்தில் உள்ள காவல் நிலையத்திற்கு சென்று எனக்கு திருமணம் ஆகிவிட்டது என்பதை உறுதி செய்தனர். பின்னர் எனது கணவரின் 3 வது அக்கா ஜெயபாரதி தனக்கு நிச்சயதார்த்தம் முடிந்து விட்டது என்பதாலும்,இன்னும் 2 மாதங்களில் திருமணம் நடக்க இருப்பதாலும் அதுவரை என்னை புனவாசலில் உள்ள எனது சித்தியின் வீட்டில் தங்கியிருக்க கூறினார்கள். அதன் அடிப்படையில் அவரது 3 வது அக்காவும், 2 வது அக்காவின் கணவரும் சேர்ந்து என்னையும் எனது கணவரையும் சேர்த்து புனவாசலில் கொண்டு வந்து விட்டனர்.

என்னோடு தங்கியிருந்த எனது கணவர் மறுநாள் ஏதோ மாத்திரை வாங்கி வந்து என்னை சாப்பிடுமாறு கூறினார். என்வென்று கேட்டபோது இன்னும் 2 மாதத்தில் எனது அக்காவின் திருமணம் இருப்பதால் நீ இந்த சமயத்தில் கற்பமாக இருந்தால் சரியாக வராது என்றும், அடுத்த குழந்தையை நான் பெற்றுக் கொள்ளலாம் என்றும் கூறினார். நான் சாப்பிட மறுத்ததால் என்னிடம் சண்டை இட்டு, அடித்து துன்புருத்தி குழந்தை இருந்தால் நான் இருக்க மாட்டேன் என்று வற்புருத்தியதால் நான் அந்த மாத்திரையை தொடர்ந்து 3 நாட்கள் சாப்பிட்டேன். பின்னர் 4 வது நாள் எனது கணவர் சித்தி வீட்டில் தங்கிஇருப்பது எனக்கு பிடிக்கவில்லை என்றும், சென்னைக்கு சென்றுவிடலாம் என்றும், எனது அக்காவின் திருமணம் முடிந்ததும் ஊரோடு வந்துவிடலாம் என்றும் சொன்னார். அதற்காக நான் முன்னதாக சென்னைக்கு சென்று வீடு பார்க்கவேண்டி இருப்பதால் செல்வதாக கூறினார். அதனை நான் மறுக்கவே ஊர்முக்கியஸ்தர் ஒருவரிடம் கூறி சென்னைக்கு தன்னை அனுப்ப அறிவுறுத்த கூறினார். அதனால் மறுக்கமுடியாமல் அவரை அனுப்பவே, தன்னுடைய அப்பா வீட்டிற்கு சென்று தன்னுடைய துணிமணிகளை எடுத்துக் கொண்டு அன்றைய தினம் சென்னைக்கு கிளம்பிவிட்டார். மறுநாள் 10.00 மணியளவில் அவரை நான் தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது வேறு ஒரு நண்பரிடம் வீடு பார்க்க சொல்லி இருப்பதாகவும், எனது கணவர் ஓட்டுநனராக பணிபுரிவதால் சென்னையில் இருந்து பெங்களுக்கு லோடு ஏற்றி செல்வதாக கூறினார். 2 நாட்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். மறுநாள் அவருடைய தொலைபேசி அனைத்து வைக்கப்பட்டுள்ளது. அந்த சமயத்தில் எனது அப்பாவிற்கு உடல்நிலை சரியில்லாததால் மனசு கேட்காமல் நான் அவரை 12 நாட்கள் கழித்து பார்க்க சென்றேன். எனது அப்பாவும் கோபம் எதையும் மனதில் வைத்துக் கொள்ளாமல் என்னிடம் பேசி அங்கு வீட்டிற்கு வந்த விசயத்தை எனது கணவரிடம் சொல்லி விடுமாறு கூறினார். எனது அப்பாவும் அவரிடம் பேசியபோது நான் இன்னும் 2 தினங்களின் என்னை வந்து அழைத்து செல்வதாக கூறினார். அதுவரை நீ என்னோடு இங்கு தங்கிவிடுமாறு எனது அப்பா கூறினார். அதன் பின்னர் என்னோடு தொலைபேசியில் தொடர்பு கொள்வதே இல்லை. நான் பேசினால் கூட எனக்கு சரியாக பதில் சொல்வதும் இல்லை. பின்னர் அப்பாவீட்டிற்கு சென்று 4 நாட்கள் கழித்து மாத்திரை போட்டதால் எனக்கு மாதவிடாய் வந்து விட்டது என்பதால் எனது கணவரிடம் மருத்தவமனைக்கு செல்ல வேண்டி இருப்பதால் பணம் அனுப்புமாறு கூறினேன். எனது கணவர் பணம் போட்டுவிடுவதாக கூறி அனுப்பவேஇல்லை. எனக்கு இரத்த போக்கு அதிகமாக இருப்பதால் என்னுடைய நகையை அடகு வைத்து மருத்துவமனைக்கு சென்று வந்தேன். அதன் பின்னர் 4 நாட்கள் அவர் என்னிடம் பேசவே இல்லை. பின்னர் நான் தொடர்பு கொண்டு பேசியபோது என்னை பிடிக்கவில்லை என்றும், நான் கருவுற்று இருப்பதாக பொய்யாக கூறினேன் என்றும் கூறினார். பின்னர் எதற்காக எனக்கு மாத்திரை எல்லாம் வாங்கி கொடுத்து கருகலைப்பு செய்ய அடித்து துன்புருத்தினாய் என்று கேட்டன். போலிசார் உன் பக்கம்

பேசியதால் என்னால் எதுவும் செய்யமுடியவில்லை இது பற்றி நான் அவரது 3 வது அக்கா ஜெயபாரதியிடம் கூறியபோது உன்னால் தான் நான் திருமணம் செய்து கொண்டேன் என்று எனது தம்பி என்னிடம் கோபித்துக் கொள்கிறேன் என்று கூறினார். எனது அப்பாவிடம் இது பற்றி கூறியபோது நான் உனக்கு திருணமம் செய்து வைக்கவில்லை உனக்கு யார் திருமணம் செய்து வைத்தார்களோ அவர்களிடம் கூறுமாறு சொன்னார். அதன் பிறகு எனது கணவரின் அப்பாவிடம் முறையிட்ட போது நான் டிபிசியில் வேலையில் இருப்பதாகவும் உன்னிடம் பேச எனக்கு வேலை இல்லை என்றும் தட்டி கழிப்பதாகவே கூறினார். பின்னர் எனது அப்பாவிடம் நடந்த விசயத்தை கூறவே அவர் எனது கணவரிடம் பேசி பொங்கலுக்கு வந்து அழைத்து செல்வதாக கூறினார். ஆனால் பொங்கலுக்கும் வந்து அழைத்து செல்லவில்லை. அதன் பின்னர் நான் வடபாதிமங்கலத்தில்உள்ள காவல் நிலையத்திற்கு சென்று புகாராக கொடுக்கமாமல் எனது அப்பாவோடு சென்று என்னை அழைத்து சென்று குடும்பம் நடத்துமாறு கூறினேன். அதற்கு அவர்கள் எனது மாமனாரிடம் தொடர்பு கொண்டபோது நாங்கள் காவல் நிலையத்திற்கு வரவில்லை எதுவாக இருந்தாலும் எஸ்பி ஆபிஸ் மூலமாக பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறினார். அதன் பிறகு 2 நாட்கள் கழித்து கணவரின் அப்பா என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு 7 மாதம் கற்பமாக இருப்பதால் வளைகாப்பு நடந்தத வேண்டும் என்று ஏலனமாக என்னிடம் பேசினார். அதற்கு உங்கள் மகனிடம் பேசிக் கொள்ளுங்கள் என்று கூறினேன். அதன் பிறகு ஒரு வாரம் கழித்து சரியான பதில் எதுவும் எனது கணவர் தரப்பில் இருந்து வரவில்லை என்பதால்,எ னது ஊர் முக்கியஸ்தர்களை அழைத்துக் கொண்டு கமலாபுரத்தில் உள்ள காரநாதன் கோவில் ஊர்முக்கியஸ்தர்களிடம் முறையிட்டபோது எனது கணவர் தரப்பினர் ஊர்கட்டுபாட்டிற்கு கட்டுபடமாட்டோம் என்று திட்டவட்டமாக கூறியதால் நீங்கள் புகார் கொடுத்துக் கொள்ளுங்கள் என்றும், எதிரிகளுக்கு சார்பாபக ஊர்ககாரர்கள் வரமாட்டோம் என்றும் கூறினார்கள். 23.03.2022 ம் தேதியன்று திருவாரூர் அனைத்து மகளிர் காவல் நிலைத்திற்கு சென்று எனது கணவரோடு என்னை சேர்த்து வைக்குமாறு எனது அப்பா மற்றும் அக்காவோடு சென்று நடந்த விபரங்களை கூறி நடவடிக்கை எடுக்குமாறும் புகார் கொடுத்தேன். எனது கணவரின் தரப்பில் இருந்து அவங்க அப்பா மற்றும் அவங்க ஊர் பஞ்சாயத்து தலைவர் வந்து எனது கணவருக்கு வேலையில் இருந்து விடுமுறை இல்லை என்றும், அடுத்தமாதம் 7 ம் தேதி தான் ஊருக்கு வருவார் என்றும் கூறியதன் அடிப்படையில் காவல் நிலையத்தில் இருந்து நான் சென்றேன். அதன் பின்னர் 10 ம் தேதிவரை காவல் நிலையத்திற்கு அவர் வரவில்லை. ஆனால் அவர் ஊரில் இருக்கும் விசயத்தை தெரிந்து கொண்டு தொலைபேசியில் கேட்டேன். நான் ஊரில் இல்லைஎன்று என்னிடம் பொய்யாக கூறினார். பரவாயயில்லை நான் உனது வீட்டிற்கு செல்கிறேன் என கூறி எனது கணவரின் வீட்டிற்கு சென்றேன். அவரது பெரியம்மா வீட்டின் கதவை திறந்துவிட்டார். நேராக கொல்லைபுரத்தில் சென்று அமர்திருந்தபோது அவரது அப்பா வீட்டிற்கு வந்து ஏன்

வீட்டிற்கு வந்தாய் என்று தகாத வார்த்தைகளில் அசிங்கமாக திட்டினார். எனது கணவருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு நான் கருவுற்றது எனது மகனுக்கு இல்லை என்றும், எனக்கு திருமணம் செய்து வைத்த ரகு என்பவரின் குழந்தை என்றும் அசிங்கமாக திட்டினார். அதன் பின்னர் இதுவரை என்னோடு என்கணவர் சேர்ந்து வாழவில்லை. என்னுடைய வாழ்க்கை கேள்விகுறியாகி இருப்பதால் செய்வது அறியாமல் தவித்து நிற்கிறேன். நீதிமன்றத்ததில் என்னிடத்தில் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.( **அந்த புகார் மனு முழுவதும் அ.சா.ஆ. 1 ஆக குறியிடுசெய்யப்படுகிறது**) போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சி வந்திருந்தும் எதிரி தரப்பில் வழக்கறிஞர் வராத காரணத்தினால் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை எனக் கருதப்படுகிறது.

# கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

# திருவாரூர்.

# CC.No.14 /2022

2022-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 2 - ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராதா | வயது | |
| தந்தை பெயர் | நடேசன் | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது திருவாரூர் மாவட்டம் வடபாதிமங்கலத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா 1 எனது சொந்த மகள் ஆவார். எனது மகள் லெட்சுமாங்குடியில் மளிகை கடையில் வேலை பார்த்து வந்தார். பின்னர் சம்பளம் கட்டுபடவில்லை என்பதால் சென்னையில் தோழிகளுடன் தங்கி வேலை பார்ப்பதாக சொன்னார். பின்னர் சென்னையில் இருந்து சிறிது நாட்கள் கழித்து ஆஜரில் இல்லாத 1 வது எதிரி ஹரிகரசுதன் தன்னை காதலிப்பதாக எனது மூத்தமகளிடம் கூறி என்னிடம் தெரியபடுத்தினார். பின்னர் அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு நேரில் வருமாறு அழைத்து அவரிடம் பேசியபோது எனது அக்காவிற்கு தை மாதம் திருமணம் நடக்க இருப்பதால் தை மாதம் கழித்து நான் திருமணம் செய்து கொள்வதாக கூறினார். பின்னர் 3 மாதம் கழித்து எனது மகளிடம் உன்னை திருமணம் செய்து கொள்ள முடியாது நீ எனக்கு பத்தோடு பதினொன்னு என்பது போன்று கூறியதாக எனது மகள் என்னிடம் கூறினார். பின்னர் நான் வேலைக்கு சென்றுவிட்டு வந்து வீட்டில் பார்த்த போது எனது மகள் வீட்டில் இல்லை. தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது கார்நார்கோவில் வரை சென்றிருப்பதாகவும் தன்னை காதலித்து வந்த ஹரிகரசுதன் வீட்டாறிடம் ஏன் வரவில்லை என்று கேட்டுவிட்டு வருவதாகவும் என்னிடம் கூறிச்சென்றார். எனது மகள் திருமணத்திற்கு முன்பாகவே 1 வது எதிரியின் மூலமாக கற்பமாக இருந்ததாகவும், அது தொடர்பாக அவர்களுக்குள் பிரச்சனை இருந்து வந்ததாகவும் என்னிடம் கூறினார். பிறகுஅங்கிருந்து வடபாதிமங்கலத்தில் உள்ள காவல் நிலையத்திற்கு சென்று 1வது எதிரியின் தரப்பில் அவரது அம்மா, அப்பா ஊர் முக்கியஸ்தர் ரவி காவல் நிலையத்தில் வைத்து பேச்சு வார்த்தை நடத்தி திருமணம் செய்வதாக ஏற்பாடு செய்து

அதன் அடிப்படையில் 10.11.2021ம் தேதி கோரையார் காளியம்மன் கோவிலில் ஊர்முக்கியஸ்தர்கள் முன்னிலையில் திருமணம் நடந்தது. என்னை மீறி சென்றதால் எனது மகளின் திருமணத்திற்கு நான் செல்லவில்லை. திருமணம் முடிந்து எனது மகளும் அவரது கணவரும் எனது உடன் பிறந்த சகோதரர் முருகையன் வீட்டில் எனது அக்காவின் திருமணம் முடிந்த பின்னர் வீட்டிற்கு அழைத்து செல்வதாக கூறி 15 தினங்கள் தங்கியிருந்தனர்.அப்போது எனது மகளுக்கு ஏதோ மாத்திரை வாங்கி கொடுத்ததில் கருகலைப்பு ஏற்பட்டதாக என்னிடம் கூறினார். அதன்பிறகு எனது மகளின் கணவர் சென்னையில் குடியிருப்பதற்காக வீடு பார்த்துவிட்டு வருவதாக கூறிவிட்டு சென்னைக்கு சென்றார். அதன்பிறகும் வெகுநாட்கள் கழித்தும் எனது மகளை அழைத்து கொண்டு குடும்பம் நடத்தவில்லை. வடபாதிமங்கலத்தில் உள்ள காவல் நிலையத்திற்கு சென்றோம். அங்கும் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் திருவாரூர் மகளிர் காவல் நிலையத்திற்கு 23.03.2022ம் தேதியன்று சென்று எனது மகள் புகார் கொடுத்தார். புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியும். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சி வந்திருந்தும் எதிரி தரப்பில் வழக்கறிஞர் வராத காரணத்தினால் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை எனக் கருதப்படுகிறது.

# கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

# திருவாரூர்.

## CC.No. 14/2022

2022-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 3 - ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரகு | வயது | |
| தந்தை பெயர் | கணேசன் | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது திருவாரூர் மாவட்டம் வடபாதிமங்கலத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அந்த ஊர் ஊராட்சிமன்ற துணைத்தலைவராகவும் பணிபுரிந்து வருகிறேன். அ.சா 1 எனக்கு தெரியும். ஆஜர் 2, 3, 5 எதிரிகள் மற்றும் ஆஜரில் இல்லாத 1, 4 எதிரிகளை எனக்கு நன்றாக தெரியும். அவர்கள் எனது பக்கத்து கிராமம் காரநார் கோவிலை சேர்ந்தவர்கள். அ.சா 1 ஆனந்தி என்பவர் 1 வது எதிரி ஹரிகரசுதன் என்பவரை காதலித்து வந்ததாகவும் அதனால் அவர் கற்பமுற்று இருந்ததாகவும் அவரை திருமணம் செய்து வாழவைக்கவில்லை என்பதாலும், திருவாரூர் அனைத்து மகளிர் காவல் நிலைத்தில் 23.03.2022 ம் தேதி புகார் கொடுத்ததன் அடிப்படையில் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தனர். 18.05.2022 ம் தேதி என்னை விசாரணை செய்து அதில் என்னோடு வடபாதிமங்கலத்தில் உள்ள கேசவன் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தார். நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த பார்வை மகரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2 ஆகவும், பார்வை மகசர் முழுவதும் அ.சா.ஆ. 3 ஆகவும் குறியிடுசெய்யப்படுகிறது**)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சி வந்திருந்தும் எதிரி தரப்பில் வழக்கறிஞர் வராத காரணத்தினால் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை எனக் கருதப்படுகிறது.

## கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

## திருவாரூர்.

## CC.No.14 /2022

2022-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 4 - ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஐயப்பன் | வயது | |
| தந்தை பெயர் | அறிவழகன் | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது வடபாதிமங்கலத்தில் குடியிருந்து பட்டுக்கோட்டையில் ரைசில் மில் மெக்கனிக்காக வேலை பார்த்து வருகிறேன். அ.சா 1 எனக்கு தெரியும். ஆஜர் 2, 3, 5 எதிரிகள் மற்றும் ஆஜரில் இல்லாத 1, 4 எதிரிகளை நான் காவல் நிலையத்திற்கு வந்தபோது எனக்கு தெரியும். அ.சா 1 ஆனந்தி என்பவர் 1வது எதிரி ஹரிகரசுதன் என்பவரை காதலித்து வந்ததாகவும் அதனால் அவர் கற்பமுற்று இருந்ததாகவும் அவரை திருமணம் செய்து வாழவைக்கவில்லை என்பதாலும், திருவாரூர் அனைத்து மகளிர் காவல் நிலைத்தில் 23.03.2022 ம் தேதி புகார் கொடுத்ததன் அடிப்படையில் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தனர். 18.05.2022 ம் தேதி என்னை விசாரணை செய்து அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த பார்வை மகரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 4 ஆக குறியிடுசெய்யப்படுகிறது**) போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சி வந்திருந்தும் எதிரி தரப்பில் வழக்கறிஞர் வராத காரணத்தினால் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை எனக் கருதப்படுகிறது.

## கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

## திருவாரூர்.

## CC.No.14/2022

2022-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 5- ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அனுசுயா | வயது | |
| கணவர் பெயர் | முருகானந்தம் | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது வடபாதிமங்கலத்தில் கிளியனூரில் எனது கணவர் மற்றும் குழந்தைகளோடு வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா 1 எனது உடன் பிறந்த சகோதரி ஆவார். ஆஜரில் உள்ள எதிரிகள் எனது தங்கையின் கணவரின் குடும்பத்தார் ஆவார்கள். எனது சகோதரிக்கு கடந்த 10.11.2021 ம் தேதி 1 வது எதிரி ஹரிகரசுதன் என்பவருடன் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு பிறகுஅன்றைய தினமே எனது தங்கை கணவர் 1 வது எதிரியின் அக்கா எனக்கு திருமணம் நிச்சயம் செய்து விட்டபடியாலும், அவர்களை எங்களது வீட்டிற்கு அழைத்து செல்ல முடியாது என்றும், அது வரை புனவாசலில் உள்ள எனது சித்தியின் வீட்டில் எனது தங்கையையும் அவரது கணவரையும் தங்க வைக்கும்படி கூறினார். அப்போது எனது அப்பா எனது தங்கை மீது கோபமாக இருந்ததால் எனது அப்பா வீட்டில் தங்க வைக்க முடியவில்லை. திருமணத்திற்கு முன்பாகவே எனது தங்கையும் எதிரி ஹரிகரசுதனும் ஒன்றாக இருந்ததில் எனது தங்கை கற்பமாக இருந்தார். திருமணத்திற்கு பின்னர் 3 நாட்கள் கழித்து தங்கையின் கணவர் கருகலைப்பு செய்வதற்காக மாத்திரை வாங்கி கொடுத்ததாக தொலைபேசி மூலமாக என்னிடம் கூறினார். அதனை நான் சாப்பிட கூடாது என்று கூறினேன். ஆனால்தங்கையின் கணவர் மாத்திரை சாப்பிடவில்வை என்றால் நான் செத்து விடுவேன் என்று மிரட்டியதாக என்னிடம் கூறினார். அந்த மாத்திரையை சாட்பிட்ட பின்னர் எனது தங்கைக்கு கரு கலைந்து விட்டது. அதன் பிறகு என்சித்தி வீட்டில் இருவரும் 15 நாட்கள் ஒன்றாக இருந்தனர். அதன் பிறகு சென்னையில் வீடு பார்த்து கொண்டு அழைத்து செல்ல இருப்பதாக எனது தங்கை என்னிடம் கூறினார். பின்னர் செல்போனை அனைத்து வைத்துவிட்டார். அதனால் அவரை தொடர்பு கொள்ள முடியவில்லை. பின்னர் ஒரு நாள்

தொலைபேசியில் அவரை தொடர்பு கொண்டு பேசியபோது உனது தங்கையோடு வாழ மாட்டேன். உன்னால் முடிந்ததை பார்த்துக் கொள் என கூறினார். ஒரு நாள் நீ உனது கணவரின் வீட்டிற்கே செல் என்று கூறினேன். அதன் அடிப்படையில் காரநார் கோவிலுக்கு சென்ற போது அங்கு கணவரின் வீட்டாரான அப்பா ஜெயமணி, அம்மா வைஜெயந்திமாலா, பெரியக்கா, சின்னக்கா ஆகியோர் எனது தங்கையை தகாத வார்த்தைகளில் திட்டி அடித்து அவர் எடுத்து சென்ற துணி பையை அவர் வீட்டிற்கு பின் புறம் உள்ள குட்டையில் போட்டு துன்புருத்தியதாக சொல்லி என்னிடம் அழுதார். அதன் பிறகு நாங்கள் அவரது கணவரின் ஊர் முக்கியஸ்தர்களிடம் கூறியபோது எதிரிகள் ஊர் பஞ்சாயத்துக்கு கட்டுபடுவதாகவும் இல்லை. மேலும் நீங்கள் வழக்கு தொடுப்பதாக இருந்தால் போட்டுக் கொள்ளுங்கள் என்றும் கூறினார்கள். அதன் பிறகு 23.03.2022 தேதி எனது அப்பா, எனது தங்கை மற்றும் எனது ஊர்காகரர்களோடு நானும் புகார்க கொடுக்க சென்றேன். புகார் விபரமானது எனக்கு தெரியும். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சி வந்திருந்தும் எதிரி தரப்பில் வழக்கறிஞர் வராத காரணத்தினால் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை எனக் கருதப்படுகிறது.

Typed under My dictation in Open Court read over to Witness and admitted by the witness to be correct.

Sd/-
S. Cintha, B.A.,B.L(Hons).,
Judicial Magistrate,
Additional Mahila Court,
(Magistrate Level),
Tiruvarur.